Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 005 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 05.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ‘6ம் வகுப்பில் இருந்து இனி மும்மொழிக் கொள்கை’ சிபிஎஸ்இ அறிவிப்புக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: மும்மொழிக் கொள்கை என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும் என முதல்வர் ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிபிஎஸ்இ பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

"இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்" என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான என் டி ஏ அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. "மும்மொழிக் கொள்கை" என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் - பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத - தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்.

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா?

இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும்.

இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்பு ரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும். முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும்.

# கிணற்றுக்குள் பாய்ந்த கார்: 6 குழந்தைகள் உள்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழப்பு



மும்பை: கிணற்றுக்குள் கார் பாய்ந்த கோர விபத்தில் 6 குழந்தைகள் உள்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தூர் கிராமத்தைச் சேர்ந்த தர்கோடே குடும்பத்தினர், அங்குள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடைபெற்ற தனியார் பயிற்சி மையத்தின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிந்து அவர்கள் அனைவரும் ஒரே காரில் வீட்டுக்குப் புறப்பட்டனர். மண்டபத்திற்கு அருகே புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கார் கிணற்றுக்குள் பாய்ந்தது காவல் துறையினரின் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பேசிய திண்டோரி காவல் நிலைய ஆய்வாளர் பகவான் மதுரே, "தனியார் பயிற்சி மையம் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு திரும்பிய போது, திருமண மண்டபத்திற்கு அருகில் இருந்த கிணற்றில் கார் விழுந்தது. இதில் 9 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 6 பேர் மாணவர்கள். கிரேன் உதவியுடன் கார் மீட்கப்பட்டுள்ளது" என்றார்.

இந்த விபத்தில் சுனில் தத்து தர்கோடே (32), அவரது மனைவி ரேஷ்மா ஆஷா அனில் தர்கோடே (32), 7 முதல் 14 வயதுக்குட்பட்ட 5 சிறுமிகள் மற்றும் ஒரு 11 வயது சிறுவன் என மொத்தம் 6 குழந்தைகள் ஆகியோர் உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். உடல்கள் திண்டோரி அரசு மருத்துவமனைக்கு உடற்கூறாய்வு செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டன. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த காவல் துறையினர், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் வட்டாட்சியர் முகேஷ் காம்ப்ளே, காவல் ஆய்வாளர்கள் பகவான் மதுரே, சந்தீப் சவுத்ரி ஆகியோர் தீயணைப்புப் படை பேரிடர் மேலாண்மைக் குழுவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். கிணற்றில் தண்ணீர் அதிகமாக இருந்ததால் மீட்புப் பணியில் சில மணி நேரம் சிக்கல் ஏற்பட்டது. இறுதியாக 2 கிரேன்களின் உதவியுடன் நள்ளிரவு 12 மணியளவில் கார் வெளியே எடுக்கப்பட்டது. நாசிக் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கிரிஷ் மகாஜன் மற்றும் அதிகாரிகள் இன்று காலை விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டனர்.

கிணற்றைச் சுற்றி தடுப்பு சுவர், எச்சரிக்கை பலகை அல்லது வேலி போன்ற எவ்விதப் பாதுகாப்பும் இல்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டினர். இது குறித்து சமாதான் பாட்டீல் என்பவர் கூறுகையில், "இந்தக் கிணறு சாலையின் நடுவே அமைந்துள்ளது. சுற்றுச் சுவர் எழுப்பக் கோரி பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதற்கு முன்பு பல கால்நடைகள் இதில் விழுந்து உயிரிழந்திருக்கின்றன" என்று வேதனையுடன் தெரிவித்தார். அதிகாரிகளின் அலட்சியமே ஒன்பது உயிர்கள் பறி போகக் காரணம் எனக் கூறி, சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க தர்கோடே குடும்பத்தினரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊழல் செய்யும் திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது பியூஷ் கோயல் பேட்டி



சென்னை தி.நகரில் உள்ள பாஜக அலுவலகத்தில் பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் தமிழக நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

தமிழகத்தில் டபுள் எஞ்சின் அரசை கொண்டுவரவேண்டும். தமிழகத்திற்கு ஜிஎஸ்டி நிதியாக மத்திய அரசு ரூ.80,000 கோடி வழங்கியுள்ளது. தமிழக அரசு வட்டியாக மட்டும் ரூ.76,000 கோடியை இந்தாண்டு செலுத்தியுள்ளது. நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பது முறைகேடு தான். தமிழ்நாடு திவால் ஆகும் நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது

எந்த திட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை. திமுக ஊழல் அரசியல் செய்கிறது. ரூ.12 லட்சம் கோடி தொழில் முதலீடு என்றார்கள். ஆனால் எதுவும் வரவில்லை. மாநில அரசுகளிலேயே பொறுப்பற்ற அரசாக தமிழ்நாடு இருக்கிறது.

சிறு குறு நிறுவனங்கள் முடக்கப்பட்டு 5 லட்சம் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு முதலீடுகள் வந்ததாக கூறுகிறார்கள். ஆனால் வேலைவாய்ப்புகள் எங்கே போயின? தமிழ்நாட்டில் முதலீடு செய்ய நிறுவனங்கள் ஏன் தயங்குகின்றன? அரசின் வருவாய் எல்லாம் கடனை அடைக்கவே சரியாக உள்ளது.

மத்திய அரசு கொடுத்த பணம் எங்கே போனது? வெளிநாட்டு முதலீடுகள் வந்ததாக கூறுகிறார்கள். ஆனால் வேலைவாய்ப்புகள் எங்கே போயின? ஜிஎஸ்டி மூலம் தமிழகத்திற்கு கிடைக்கும் வருவாய் எங்கே செல்கிறது? தமிழக முதல்-அமைச்சரிடம் ஒரு கேள்வி கேட்டுகிறேன் . பணம் எங்கே சென்றது? தமிழ்நாட்டின் தொழில்துறை சிறப்பாக இருக்கிறது. நிர்வாக காரணத்தால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுள்ளது.

மது விற்பனை, அரசு ஒப்பந்த பணிகள் அனைத்திலும் கமிஷன். எந்த திட்டங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவில்லை. திமுக ஊழல் அரசியல் செய்கிறது.

டி.ஆர்.பாலு, ப.சிதம்பரம், தயாநிதி மாறன் ஆகியோர் ஊழல் வழக்கை எதிர்கொள்கின்றனர். ஊழல் செய்யும் திமுக தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது. மோடி வழிகாட்டுதலுடன் பழனிசாமி நல்லாட்சி வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மேற்கு வங்கத்தில் திடீரென 4,660 வாக்குச் சாவடிகளை அதிகரித்து தேர்தல் ஆணையம் உத்தரவு

டெல்லி: வாக்கு எண்ணிக்கை முடிந்தபின்னரும் 50,000 மத்திய படையினர் மேற்கு வங்கத்தில் தொடரவேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் வரலாறு காணாத எண்ணிக்கையில் 2.40 லட்சம் மத்திய படையினர் தேர்தல் பணிகளுக்கு தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. இதில் 29ஆம் தேதி வாக்குபதிவு முடிந்த பின்னர் 1,70,000 பேர் வாக்கு எண்ணிக்கை வரை தொடர்வார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் 4ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை முடிந்த பின்னரும் 50,000 மத்திய படையினர் மேற்கு வங்கத்தில் தொடர்வார்கள், மறு உத்தரவு வரை இந்த படையினர் மேற்கு வங்கத்தில் தொடர்வார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.





வன்முறை ஏற்படாமல் தடுக்கவே இந்த நடவடிக்கை என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. இதனிடையே மேற்கு வங்கத்தில் திடீரென 4,660 வாக்குச் சாவடிகளை அதிகரித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. 321 வாக்குச்சாவடிகள் இடம் மற்றம் செய்யப்பட்டுள்ளது. மார்ச் 15ஆம் தேதி தேர்தல் அறிவித்தபோது மேற்குவங்கத்தில் 80,719 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்தது. தற்போது கூடுதலாக 4,660 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1,200க்கும் மேற்பட்ட வாக்காளர்களை கொண்ட இடங்களில் 4,660 கூடுதல் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுவதாக கூறப்பட்டு ள்ளது. இது தவிர 321 வாக்குச்சாவடிகளை இடம் மற்றம் செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்கு வங்கத்தில் வாக்குச்சாவடிகள் எண்ணிக்கை 85,379 ஆக உயர்ந்துள்ளது.

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# சட்டமன்ற தேர்தல் 2026: புதுச்சேரி மக்களின் நலனே இலக்கு: தமிழக வெற்றிக் கழகத்தின் வாக்குறுதிகள்!




புதுச்சேரி மாநிலத்தின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அம்மாநில மக்களுக்காக முன்வைத்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

மாநிலத்தின் வளர்ச்சி

ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது அதன் நிர்வாகச் சுதந்திரத்திலும், அடித்தட்டு மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திலுமே அடங்கியுள்ளது என்பதை உணர்த்தும் வகையில் இந்த அறிவிப்புகள் அமைந்துள்ளன. குறிப்பாக, புதுச்சேரியின் நீண்டகால கோரிக்கையான முழு மாநில அந்தஸ்து குறித்த விஜய்யின் நிலைப்பாடு, அம்மாநில அரசியலில் ஒரு தீர்க்கமான முடிவாகப் பார்க்கப்படுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, தங்குதடையின்றி மக்கள் பணியாற்றுவதற்கு துணை நிலை ஆளுநரின் தலையீடு இல்லாத ஒரு சூழல் அவசியம் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். இதற்காகத் தமிழக வெற்றிக் கழகம் முன்னின்று முழு மாநில அந்தஸ்தைப் பெற அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பது முதன்மையான வாக்குறுதியாக உள்ளது.

6 மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல்

ஜனநாயகத்தின் வேர்களாகக் கருதப்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் புத்துயிர் அளிக்கும் விதமாக, ஆட்சிப் பொறுப்பேற்ற 6 மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பு, அதிகாரப் பரவலாக்கலில் விஜய்க்கு உள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது.நீண்டகாலமாக முடங்கிக் கிடக்கும் உள்ளாட்சி நிர்வாகத்தைச் சீரமைப்பதன் மூலம், கிராமப்புற மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுப் பணிகள் நேரடியாக மக்களைச் சென்றடையும். அதேபோல், இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், அரசுத்துறைகளில்காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும் எவ்விதத் தொய்வுமின்றி உடனுக்குடன் நிரப்பப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளார். இது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, புதுச்சேரி இளைஞர்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை வழங்கியுள்ளது.

25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி

சமூகப் பாதுகாப்பு மற்றும் மகளிர் நலன் சார்ந்து விஜய் அறிவித்துள்ள திட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக, மகப்பேறு காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்கும் வகையில், 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பது பெண்களின் ஆரோக்கியத்திலும், குழந்தைகளின் மேம்பாட்டிலும் அக்கறை கொண்ட ஒரு திட்டமாகும். அதுமட்டுமின்றி,மருத்துவச்செலவுகளால் ஏழை எளிய மக்கள் கடனாளிகளாக மாறும் சூழலை மாற்றியமைக்க, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருபத்தி ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவக் காப்பீடு வழங்கப்படும் என்ற அறிவிப்பு ஒரு புரட்சிகரமான முன்னெடுப்பாகும். இது தரமான சிகிச்சை அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யும் ஒரு பாதுகாப்பு வளையமாக அமையும்.

நூறு சதவீதம் பயிர் காப்பீடு

விவசாயிகளின் நலனைக் காப்பதிலும் தமிழக வெற்றிக் கழகம் தனி கவனம் செலுத்தியுள்ளது. இயற்கைச் சீற்றங்களாலோ அல்லது எதிர்பாராத சூழல்களாலோ பயிர் சேதம் அடையும் போது விவசாயிகள் தற்கொலை விளிம்பிற்குச் செல்வதைத் தடுக்க, நூறு சதவீதம் பயிர் காப்பீடு வழங்கப்படும் என்று விஜய் தெரிவித்துள்ளார். இது விவசாயத் தொழிலை ஒரு பாதுகாப்பான தொழிலாக மாற்ற உதவும். மேலும், நடுத்தர மற்றும் ஏழை மக்களின் அன்றாடத் தேவைகளில் ஒன்றான மின்சாரத்தைப் பொறுத்தவரை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு, அவர்களின் மாதந்திரச் செலவைக் கணிசமாகக் குறைக்க உதவும். இவ்வாறு கல்வி, வேலைவாய்ப்பு,மருத்துவம் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் என அனைத்துத் தளங்களிலும் புதுச்சேரியை ஒரு முன்மாதிரி மாநிலமாக மாற்றும் நோக்கில் இந்த வாக்குறுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. புதுச்சேரி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதோடு, அவர்களின் உரிமைகளை மீட்டெடுப்பதே இந்தத் திட்டங்களின் சாராம்சமாகும் என்று தவெகவினர் கூறுகின்றனர்.

# தேர்தல் நேரத்தில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் ஏன்? ப.சிதம்பரம் கேள்வி



நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-ம் பகுதி நேற்று முன் தினம் நிறைவு பெற்றது.இந்தநிலையில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை விரைவில் அமல்படுத்தும் வகையில், மக்களவைதொகுதிகளின் எண்ணிக்கையை 543-ல் இருந்து 816-ஆக உயர்த்துவதற்கான மசோதாக்களை நிறைவேற்றுவதற்காக, நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் மீண்டும் வருகிற 16-ந்தேதி கூட இருப்பதாக தகவல்கள் வெளியாகின. 3 நாட்கள் நடைபெறும் என தெரிகிறது. இதனை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை மந்திரி கிரண் ரிஜிஜு உறுதி செய்தார். மத்திய அரசு கூட்ட உள்ள இந்த சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் இன்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: வரும் 16, 17, 18 ஆகிய தேதிகளில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கூட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 543-லிருந்து 816 ஆக அதிகரிப்பது மற்றும் தொகுதிகளை மறுவரையறை செய்வது தொடர்பான மசோதாக்கள் கொண்டு வரப்போவதாக செய்தி வந்துள்ளது. அடுத்ததாக தொகுதிகளை மறுவரையறைசெய்யும்மசோதாவும் கொண்டு வரப்படும் என்று சொல்லப்படுகிறது. இதில் பெரிய பேராபத்துகள் உள்ளன. ஒன்று தமிழ்நாட்டில் 39 மக்களவை உறுப்பினர்கள் உள்ளனர். அனைவரும் பாஜகவிற்கு எதிரான கட்சிகளில் உள்ளனர். மேற்கு வங்காளத்தில் 42 தொகுதிகள் உள்ளன. அதில் 28 திரிணாமுல் காங்கிரஸ்எம்.பிக்கள் உள்ளனர். எதிர்த்து வாக்களித்தால் இரு அவைகளிலும் இந்த மசோதா தோல்வி அடையும். அதற்காகவே தமிழ்நாடு, மேற்கு வங்க தேர்தல் இருக்கும் நிலையில், அவையை கூட்டுவதாக நாங்கள் நம்புகிறோம். இது சதி, அரசியல் சாசனத்தில் மோசடி. 67 உறுப்பினர்களை ஒத்துக்கி வைத்துவிட்டு என்ன அரசியல் சாசனம் நிறைவேற்றுவீர்கள்.

# ‘தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் மாநில தலைவர் பதவியில் இருந்து விலகிவிடுவேன்’

## செல்வப்பெருந்தகை பேட்டி

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெற உள்ளது.தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4-ந்தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன. தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் 28 தொகுதிகளில் போட்டியிடக் கூடிய காங்கிரஸ் வேட்பாளர்களை இறுதி செய்வதற்கான பணியில் இழுபறி நீடித்து வந்த நிலையில், தமிழ்நாடு சட்டசபை தேர்தலுக்கான வேட்பாளர்களை இறுதி செய்ய காங்கிரஸ்கட்சியின் மத்தியதேர்தல் குழு கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. இதில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவைத் தலைவர் ராகுல்காந்தி, செல்வப்பெருந்தகை உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.

இதனை தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.இதன்படி,காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் மாநில தலைவர் பதவியில் இருந்து விலகி, தொகுதி




பணிகளில்முழுமையாக கவனம்செலுத்த உள்ளதாகசெல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;-

"தேர்தல் முடிவுகள் வந்த பிறகு என்னுடைய பணி முழுவதும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்களுக்காக மட்டுமே இருக்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது.தேர்தல் முடிவுகள் வந்தபிறகு எங்கள் அகில இந்திய தலைமையிடம் பேசி தொகுதி வேலையையும், தமிழ்நாட்டு வேலையையும் மட்டும்தான் பார்க்கப் போகிறேன்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நூற்றுக்கு நூறு வெற்றியை பெற்றுத் தந்தோம். எதிர்வரும் சட்டமன்ற தேர்தலிலும் நூற்றுக்கு நூறு வெற்றியை பெறப்போகிறோம். பதவியை விட்டு விலகும்போது மனநிறைவோடு விலகவேண்டும். நான் மனநிறைவோடு மாநில தலைவர் பதவியில் இருந்து விலகுவேன்.

அதே சமயம், பதவி விலகக் கோரி எனக்கு எந்த அழுத்தமும் கிடையாது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு கூட நான் தலைவராக இருப்பேன். நான் எந்த பதவி கேட்டாலும் ராகுல் காந்தி கொடுப்பார். மாநில தலைவராக 2 ஆண்டுகளில் என்னென்ன பணிகள் செய்துள்ளேன் என்பது எங்கள் தலைவர்களுக்கு தெரியும்.

நான் காங்கிரஸ் மாநில தலைவராக இருந்த 2 ஆண்டுகளில் திட்டங்கள் தீட்ட முடிந்தது. ஆனால் உறவுகள் வைத்துக் கொள்வதில் நேரடியாக சில சிக்கல்கள் இருந்தன. தமிழ்நாட்டின் பிள்ளையாக 2 ஆண்டுகள் இருந்தேன். தேர்தலுக்கு பிறகு தமிழ்நாட்டின் பிள்ளையாக வேறு யாராவது இருப்பார். நான் ஸ்ரீபெரும்புதூர் குடும்பத்தின் பிள்ளையாக இருப்பேன்."இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சி.ஆர்.பி.எப். வாகனங்களில் பணம் கொண்டு செல்லப்படுகிறது: மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு



மேற்கு வங்காள சட்டசபை தேர்தலை ஒட்டி, தக்ஷின் தினாஜ்பூர் மாவட்டம் ஹரிராம்பூரில் நடந்த திரிணாமுல் காங்கிரஸ் பிரசார கூட்டத்தில் அம்மாநில முதல்-மந்திரி மம்தா பானர்ஜி கலந்துகொண்டார். அதில் அவர் பேசியதாவது:

மால்டா மாவட்டம் மொதாபாரியில் நீதிபதிகளை சிறைபிடித்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஒவைசி தலைமையிலான அகில இந்திய மஜ்லிஸ் கட்சியினரும், இந்திய மதச்சார்பற்ற முன்னணி கட்சியினரும்தான்.இந்தசம்பவத்துக்கு மூளையாக செயல்பட்ட வக்கீல் மொபாக் கருல் இஸ்லாமை மாநில சி.ஐ.டி. போலீசார் கைது செய்துள்ளனர். பக்டோரா விமான நிலையத்தில் இருந்து தப்ப முயன்ற போது அவர் சிக்கினார். அகில இந்திய மஜ்லிஸ் கட்சியில்இருந்துஅவரை கடனாக பெற்று,பா.ஜனதாவினர்இங்குகொண்டு வந்துள்ளனர்.

இந்திய மதச்சார்பற்ற முன்னணி, இடதுசாரி கூட்டணியில் உள்ளது. காங்கிரசும், பா.ஜனதாவும் இச்சம்பவத்தை தூண்டிவிட்டுள்ளன. 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலை வைத்து இந்த சட்டசபை தேர்தலை ஏன் நடத்த முடியாது? அதில் ஊடுருவல்காரர்கள் பெயர்கள் இருந்தால், பிரதமர் மோடியும் அவர்களது வாக்குகளால்தான் வெற்றி பெற்றுள்ளார். அவர் முதலில் ராஜினாமா செய்ய வேண்டும்.

சி.ஆர்.பி.எப். வாகனங்களில் பணம் கொண்டு செல்லப்படுகிறது. உரிய நேரத்தில் அதை அம்பலப்படுத்துவேன். அமித்ஷா மேற்கு வங்காளத்துக்கு வந்தால், பா.ஜனதாவின் வாக்கு வங்கி குறையும். இவ்வாறு அவர் பேசினார்.

# டெல்லியில் திடீர் வானிலை மாற்றம்: புழுதிப்புயலால் மக்கள் அவதி




தலைநகர் டெல்லியில் அவ்வப்போது வானிலை திடீரென மாறி மக்களை சிரமத்திற்குள்ளாக்கிவிடும். அந்த வகையில் நேற்று திடீரென புழுதிப்புயல் வீசி டெல்லியையே கலங்கடித்து விட்டது. டெல்லியில் குளிர் ஓய்ந்து கடந்த சில வாரங்களாக வெயில் அடித்து வந்தது.

காற்றும் சிறிது இதமாக வீசி வந்ததால் வெயில் அவ்வளவாக தெரியவில்லை.இந்த நிலையில் நேற்று மாலையில் திடீரென காற்று சூறாவளிபோல சுழன்று வீசியது. இந்த காற்றால் புழுதி மேலே எழும்பி, எங்கும் ஒரே புழுதி மண்டலமாக காட்சி அளித்தது.

இந்த புழுதிப்புயலால் சாலையில் நடந்து சென்றவர்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் நிலை தடுமாறினார் கள். நான்கு சக்கர வாகனங்களின் கண்ணாடியில் புழுதி பட்டு பார்வைத்திறனை மறைத்தது. இந்த புழுதிப்புயலுக்கு பிறகு சில இடங்களில் மழையும் பெய்தது. அப்போதும் காற்று வேகமாக வீசி மக்களை இன்னலுக்கு உள்ளாக்கியது. இந்த திடீர் வானிலை மாற்றத்தால் மக்கள் அவதியடைந்தனர். ஒட்டுமொத்தத்தில் இந்த புழுதிப்புயலால் டெல்லி சிறிது நேரம் ஸ்தம்பித்தே போனது.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.85 கோடி

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று



முன்தினம் 69 ஆயிரத்து 649 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.24ஆயிரத்து 644 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல்காணிக்கை ரூ.3கோடியே85லட்சம் ஆகும்.

## ஏப்.1 முதல் டிஜிட்டல் பரிவர்த்தனையில் அமலுக்கு வந்த புதிய விதிகள் என்னென்ன? முழு விவரம்



இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனை தற்போது பெருகிவிட்டது. சாதாரண பெட்டிக்கடை முதல் வணிக வளாகங்கள் வரை யுபிஐ பரிவர்த்தனை செய்யப்படுவதை பார்க்க முடிகிறது. முன்பெல்லாம் கடை வீதிக்கு போனால் பர்ஸ் நிறைய பணம் வைத்துகொண்டுசெல்லவேண்டியிருக்கும். ஆனால், தற்போது கையில் ஒரு பைசா ரொக்கமாக இல்லாமல் காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரைஎங்குவேண்டுமானாலும் சென்று வர முடியும் அளவிற்கு டிஜிட்டல் பரிவர்த்தனை அசுர வளர்ச்சி பெருகிவிட்டது. டிஜிட்டல் பரிவர்த்தனை பெருகிவிட்ட அதேவேளையில் , பல மோசடிகளும் அதைவைத்து நடைபெறுவதை பார்க்க முடிகிறது. இதையடுத்து மோசடிகளை கட்டுப்படுத்தும் விதமாக ரிசர்வ் வங்கிகடுமையானவிதிகளை கொண்டு வந்துள்ளது. கடந்த 1 ஆம் தேதி முதல் அமலுக்கு வந்த விதிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு; * யுபி.ஐ., கார்டு, மொபைல் வாலெட் போன்ற அனைத்துடிஜிட்டல்பரிவர்த்தனைகளுக்கும் இரண்டு நிலை உறுதிப்படுத்துதல் என்பது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒடிபி மட்டுமின்றி பின் நம்பர், கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக் போன்ற கூடுதல் சரிபார்ப்பு தேவைப்படும். இதனால் பரிவர்த்தனை சற்று நேரம் எடுத்துக்கொண்டாலும், மோசடிகளை தடுக்க அதிக பாதுகாப்பு கிடைக்கும்.

*குறைந்த தொகை கொண்ட பரிவர்த்தனைகள் எளிதாக செய்ய முடியும். எனினும், பெரிய தொகை அல்லது புதிய சாதனங்களில் செய்யப்படும்பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் பாதுகாப்புசோதனைகள் இருக்கும்.

*பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக மோசடி நடந்தால், வங்கிகள் மற்றும் பணப்பரிவர்த்தனை நிறுவனங்கள் பயனர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டிய சூழல் உருவாகிறது. இதன் மூலம் புகார்களுக்கு விரைவான தீர்வு கிடைக்கும். *இனி ஒரு நாளில் 50 முறை மட்டுமே பேலன்ஸ் சரிபார்க்க முடியும். இ.எம்.ஐ., சந்தா போன்ற தானியங்கி பணப்பரிவர்த்தனைகள் இனி இரவு 9.30 மணி முதல்காலை 10மணிக்கு முன்பாக நடந்து விடும்.

## மதுவிலக்கு அமலில் இருந்த போதிலும் பீகாரில் பயங்கரம்: கள்ளச்சாராயத்திற்கு 4 பேர் பலி



பீகார் மாநிலம்,கிழக்கு சம்பாரன் மாவட்டத்தின் மோதிஹாரி உள்ள துர்கௌலியா மற்றும் ரகுநாத்பூர் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை இரவு அங்கு உள்ள மக்கள் கள்ளச்சாராயம் குடித்துள்ளனர். இதில் கலக்கப்பட்டிருந்த மெத்தனால் அல்லது தொழிற்சாலை ஸ்பிரிட் காரணமாக விஷத்தன்மை ஏற்பட்டு இருக்கலாம் என தெரிகிறது. இந்தநிலையில்கள்ளச்சாராயம் குடித்த சில மணி நேரத்திலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான வாந்தி, மயக்கம், தலைவலி மற்றும் பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஏழு பேர் சிகிச்சைக்கு பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். ஆனால் இதுவரை இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைதற்போது நான்காக உயர்ந்துள்ளதாக கிழக்கு சம்பாரன் மாவட்ட ஆட்சியர் சௌரப் ஜோர்வால் தெரிவித்தார். அறிந்த போலீசார் உடனடியாக தீவிர விசாரணையை தொடங்கினர். முதற்கட்டமாக கடமையில் கவனக்குறைவாக இருந்ததாக கூறி, துர்கௌலியா காவல் நிலைய பொறுப்பு அதிகாரி மற்றும்கிராமகாவலர் ஆகியோர் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கிராம காவலர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர்சௌரப்ஜோர்வால் தெரிவித்தனர்.

கள்ளச்சாராயம் விநியோகம் செய்ததாக கருதப்படும் முக்கிய குற்றவாளி மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும். மேலும் மாவட்ட காவல்துறை மற்றும் மதுவிலக்கு அதிரடிப்படைகுழுவினர் அந்த பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

பீகாரில் 2016 முதல் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், கள்ளச்சாராய விற்பனை மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகவும். மேலும் இந்த சம்பவம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4 லட்சம் மத்திய ஆயுதப்படை போலீஸார்



புது டெல்லி: மேற்கு வங்க தேர்தல் பாதுகாப்புக்காக 2.4லட்சம்மத்திய ஆயுதப்படை போலீஸார் (சிஏபிஎஃப்) அனுப்பப்பட உள்ளனர். மேற்கு வங்க சட்டப் பேரவை தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கான பணிகளை தேர்தல்ஆணையம்மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் மேற்கு வங்க மாநில தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 2.4 லட்சம் சிஏபிஎஃப் போலீஸார் அனுப்பப்பட உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இவர்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

மேற்கு வங்க மாநிலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையிலான மத்திய ஆயுதப்படை போலீஸார் பாதுகாப்புப்பணிகளுக்கு நியமிக்கப்பட உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து தேர்தல் ஆணைய மூத்த அதிகாரி ஒருவர் கூறும் போது, "மேற்கு வங்கத்தில் வரும் 29-ம்தேதி 2-ம்கட்டத் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையத்துக்கு பாதுகாப்பாக கொண்டு செல்லப்படும். வாக்கு எண்ணும் மையங்களுக்கு வெளியே சுமார் 200 கம்பெனி சிஏபிஎஃப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர்.

அது மட்டுமல்லாமல் சுமார் 500 கம்பெனி சிஏபிஎஃப் கம்பெனி படையினர், மாநிலம் முழுவதும் சட்டம்-ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவர். அண்மையில் மால்டா மாவட்டத்தில் நீதித்துறை அதிகாரிகளை முற்றுகையிட்டு சில கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அது போன்ற பிரச்சினைகள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க பாதுகாப்புப் பணிகளை ஆயுதப் படை போலீஸார் மேற்கொள்வர். மாநிலம் முழுவதும் சுமார் 2.4 லட்சம் மத்திய ஆயுதப் படை போலீஸார் தீவிர பாதுகாப்புப் பணியில் இருப்பர். இதுதவிர மேற்கு வங்க மாநில போலீஸாரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவர்" என்றார்.

## ஐஎன்எஸ் தாராகிரி போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு



விசாகப்பட்டினம்: ஐஎன்எஸ் தாராகிரி போர்க்கப்பல் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கப்பட்டது.

இந்தியக் கடற்படையின்வலிமையைமேலும் அதிகரிக்கும் விதமாக, நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஎன்எஸ் தாராகிரி உருவாக்கப்பட்டுள்ளது. விசாகப்பட்டினத்தில் இந்தப் போர்க்கப்பலை கடற்படையில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று இணைத்து வைத்தார்.

இந்த விழாவில் கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல்தினேஷ்குமார் திரிபாதி, பாதுகாப்புப் படை தலைமைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர்கலந்துகொண்டனர்.

மும்பையிலுள்ள மசகான் கப்பல் கட்டும் தளத்தில் கட்டமைக்கப்பட்ட தாராகிரி, 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் கீழ் உருவான 6,670 டன் எடையுள்ள வலிமைமிக்க போர்க்கப் பலாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள 75 சதவீதத் திற்கும் அதிகமான பாகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை. இந்தத் திட்டத்தின் மூலம் 200-க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தாராகிரி உருவாக்கத்துக்கு பங்களிப்பு செய்துள்ளன.

முந்தைய வடிவமைப்புகளைக் காட்டிலும் முன்னேறிய தொழில்நுட்பத்தைக் கொண்ட இக் கப்பல், ரேடார்களின் பார்வையில் படாமல் தப்பிக்கும் வசதியைக் கொண்டது. எதிரி நாடுகளின் ரேடார்களுக்குத் தெரியாமல் கடல் பரப்பில் ஊடுருவித் தாக்குதல் நடத்தும் திறன் இந்த கப்பலுக்கு உண்டு.

இக்கப்பல் அதிவேகமாகவும், நீண்ட தூரம் பயணிக்கும் திறனுடனும்வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒலியை விட வேகமான சூப்பர்சோனிக் ஏவுகணைகள், நடுத்தர தூர வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறிந்து அழிக்கும் கருவிகள் இதில் உள்ளன.

போர்க்களத்தில் நொடிப் பொழுதில் முடிவெடுக்க உதவும் நவீன 'காம்பாட் மேனேஜ்மென்ட் சிஸ்டம்' மூலம் ஆயுதங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் மாறிவரும் பாதுகாப்புச் சூழல் மற்றும் இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் முக்கியத்துவத்தைக்கருத்தில்கொண்டு, தாராகிரி போர்க்கப்பலின் வருகை மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளதாகராஜ்நாத் சிங் தெரிவித்து உள்ளார்.

## காப்புரிமை பெற்ற மருந்துகளுக்கு 100% வரி: ட்ரம்ப் உத்தரவால் இந்தியாவுக்கு பாதிப்பா?



புது டெல்லி: அமெரிக்க அதிபர்டொனால்டு ட்ரம்ப் நேற்று வெளியிட்ட உத்தரவில் கூறியுள்ளதாவது: அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் காப்புரிமை பெற்ற அல்லது பிராண்டட் மருந்துகளுக்கு 100 சதவீதம் வரை வரி விதிக்கப்படும். மருந்துகள், மூலப்பொருட்களின் இறக்குமதியால் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் கையாள இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அமெரிக்க அரசுடன் மிகவும் விருப்பமான நாடு என்ற அடிப்படையில் விலை நிர்ணய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு, மருந்து உற்பத்தியை அமெரிக்காவிலேயே மேற்கொள்ள ஆலைகளை அமைக்கும் நிறுவனங்களுக்கு பூஜ்ஜியம் சதவீத வரி சலுகை அளிக்கப்படும்.

தற்போது ஆலைகளை அமைத்துக்கொண்டிருந்து, ஆனால் விலை நிர்ணய ஒப்பந்தம் செய்யாத நிறுவனங்களுக்கு 20 சதவீத வரி விதிக்கப்படும். இது நான்கு ஆண்டுகளில் 100 சதவீதமாக உயர்த்தப்படும். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இந்திய மருந்து நிறுவனங்கள் உலக அளவில் 'ஜெனரிக்' எனப்படும் மருந்து உற்பத்தியில் முன்னணியில் உள்ளன. இவற்றுக்கு தற்போது வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளதால், குறுகிய காலத்தில் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்துகளுக்கு பாதிப்புஇருக்காது. ஜெனரிக் மருந்து இறக்குமதியையும் ஓராண்டுக்குப் பிறகு ஆய்வு செய்யப் போவதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளதால், டாக்டர் ரெட்டீஸ் லேபரேட்டரீஸ், சன் பார்மா, பயோகான் போன்ற இந்திய நிறுவனங்கள் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும்.

## தனித்து போட்டியிடுவதால் 10 முதல் 15 தொகுதிகள் வரை வெற்றி வாய்ப்பு கிருஷ்ணசாமி பேட்டி



தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த புதிய தமிழகம் கட்சியின் நிறுவனத் தலைவர் கிருஷ்ணசாமி, "கூட்டணியில்சேராததுகவலை ஒன்றும் இல்லை;தமிழ்நாட்டில் வலுவான கூட்டணி அமைக்க வேண்டும் என்று முடிவெடுத்தது உண்மைதான். தமிழ்நாட்டில் நல்லாட்சி அமைய வலுவான கூட்டணி அமைக்க இருந்தது உண்மை. அதற்காகபெரும்முயற்சி எடுத்திருந்தேன். ஆனால் கைக்கூடவில்லை.

புதிய தமிழகம் கட்சி யாரையும்நம்பி இல்லை. மக்களோடு மக்களாக இணைந்து இருக்கின்றோம். புதிய தமிழகம் கட்சி 70 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடவுள்ளது. மதுக்கடைகளை மூடுவதற்கு உண்டான குரல் சட்டமன்றத்தில் எழுப்பப்படும். அங்கன்வாடி பணிகளுக்குக்கூட ரூபாய் 10 லட்சம் இருக்கிறதா? என்று விலை பேசப்படுகிறது. அதனை எதிர்த்து சட்டமன்றத்தில் குரல் கொடுப்போம்; மக்களுக்கு உண்மையாக இருப்போம்.

எதையும் எதிர்பார்க்காமல் இருப்போம். நாங்கள் கூட்டணியில் இணைந்திருந்தால் இரண்டு தொகுதிகளில் மட்டுமேவெற்றி வாய்ப்பு இருந்தது. ஆனால் தனித்துப் போட்டியிடுவதால் 10 முதல் 15 சட்டமன்றத் தொகுதிகள் வரை வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

மற்ற தொகுதிகளில் கணிசமான அளவில் வெற்றிவாய்ப்புஉள்ளது. வரும் ஏப்ரல் 07- ஆம் தேதி முதல் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடவிருக்கின்றோம். வரும் ஏப்ரல் 06- ஆம் தேதி நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணிக்குள் நாங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவிருக்கிறோம். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத்தொகுதியில் நிச்சயமாக வெற்றி பெறுவோம்" எனத்தெரிவித்துள்ளார்.

பொட்டலூரணி மீன்கழிவு ஆலையை மூடப்படாவிட்டால் தேர்தலை புறக்கணிப்போம் என்று அப்பகுதி மக்கள் அறிவித்துள்ளது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு,'தேர்தல் அறிக்கையில் கூறுவோம்' எனத் தெரிவித்துள்ளார்.

## தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என தலைமைக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தேன்: அண்ணாமலை பேட்டி




சென்னை:

தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை எனதலைமைக்குஏற்கனவே தெரிவித்திருந்தேன் என்று பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை பேட்டி அளித்து உள்ளார்.

தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் கடந்த மாதம் 30ம் தேதி தொடங்கியது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன

அதேவேளை, தேர்தல் ஆணையமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என தலைமைக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தேன் என்று அண்ணாமலை பேட்டி அளித்துள்ளார். இது தொடர்பாக பேட்டி அளித்த பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கூறியதாவது;

காலங்கள் இன்னும் இருக்கிறது; காட்சிகள் மாறும்; இன்னும் தேர்தல்கள் வரத்தான் உள்ளன. தேர்தலில் போட்டியிடாததற்கான காரணத்தை மே 4 ம் தேதிக்கு பிறகு தெரிவிக்கிறேன்.

தேர்தலில் போட்டியிடவில்லை என எழுத்துப்பூர்வமாக தெரிவித்துவிட்டேன். கோவையில் வானதி போட்டியிடுவது சரி; நான் எந்த தொகுதியையும் கேட்கவில்லை. வேட்பாளர் பட்டியலில் கூட என் பெயர் இல்லை. கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு பிரச்சாரம் செய்ய உள்ளேன். எந்த தொகுதியிலும் நான் நிற்கலாம்; நான் வேட்பாளர் ரேஸிலேயே இல்லை. பாஜக வேட்பாளர்கள், கூட்டணிக் கட்சிகளுக்கு பரப்புரை செய்ய தயாராக உள்ளேன் என்று கூறியுள்ளார்.

# தென்காசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளரிடம் சுரண்டை பகுதி மக்களின் எதிர்பார்ப்பு என்ன?



நடைபெறும்சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரிடம் சுரண்டை பகுதியின் வளர்ச்சிக்கு தேவையான எதிர்பார்ப்புகள் என்ன? அவற்றை போட்டியிடும் வேட்பாளர்கள் நிறைவேற்றுவார்களா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது

தென்காசிமாவட்டத்தில் மிக முக்கியமான வர்த்தக நகரமாகவும் சுமார் 75 ஆயிரம் மக்கள் தொகை மற்றும் 37 ஆயிரம் வாக்காளர்கள் சுமார் 200 கிராமங்களுக்கு தாய் கிராமமாகும் தென்காசி சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளர்களின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் அரசியல் கேந்திர மாக விளங்கு கிறது. சுரண்டை நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப அரசு அலுவலகங்கள் இல்லைஅதனைநிறைவேற்ற தொடர் கோரிக்கைகள் விடுத்தும் இதுவரை கிடைக்கவில்லை அதனை நிறைவேற்றுவேன் என வாக்குறுதி அளிக்கும் வேட்பாளர்கள் அதனை நிறைவேற்றாததும் தொடர்கதையாகி வருகிறது சுரண்டை மற்றும் ஊத்துமலை பகுதியில் உள்ள விவசாயிகள் நலன் கருதி இரட்டை குளம் ஊத்துமலை கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என 60 வருட கோரிக்கை கிடப்பில் போடப்பட்டது

சுரண்டை மற்றும் சுற்றுவட்டார பகுதி கிராம மக்கள் போக்குவரத்து வசதியில் தன்னிறைவு பெறவும் தொலை தூர பஸ் வசதி கிடைக்கவும், நிர்வாக வசதிக்காகவும், டீசல் மற்றும் டிரிப்புகளை சேமிக்கவும் வசதியாக அரசு பஸ் டெப்போ அமைக்க வேண்டும் என 40 வருடமாக தொடர் கோரிக்கை விடுத்தும் சுரண்டையில் அரசு பஸ் டெப்போ அமைக்கலாம் என போக்குவரத்து கழகத்தில் இருந்து கருத்துரு அனுப்பியும் அதற்கான இடம்பரிசீலனைசெய்யப்பட்டும் இது வரை பஸ் டெப்போ அமைக்கபடவில்லை இந்த கோரிக்கை பலமுறை கிடப்பில் போடப்பட்டுள்ளது அதே போன்று சுரண்டை யில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே செயல்படுகிறது ஆகவே படுக்கை வசதிகளுடன் கூடிய அரசு மருத்துவமனைஅமைக்கவேண்டும் என தொடர்ந்து பல வருடங்களாக கோரிக்கை விடுத்தும் செயல்படுத்தப்பட வில்லை ஏற்கனவே தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் சில மாதங்களுக்கு முன்பு தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த போது முதலமைச்சரிடம் அரசு மருத்துவமனைஅமைக்கவேண்டும் என பெண்கள் கோரிக்கை விடுத்தனர் முதலமைச்சர் அதனை நிறைவேற்றி தருகிறேன் என உறுதி கூறியது குறிப்பிடத்தக்கது

ஆகவே தற்போது தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைமருத்துவகல்லூரி மருத்துவமனையாக தரம் உயர்த்தபடவுள்ள நிலையில் சுரண்டையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக அமைக்க வேண்டும் எனவும் அதற்கான இடவசதியை இப்பகுதி பொதுமக்களே தரவும் தயாராக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது சுரண்டையை சுற்றியுள்ள போலீஸ் ஸ்டேசன்களை(சுரண்டை, வீரகேரளம்புதூர், சாம்பவர்வடகரை, ஆயக்குடி, சேர்ந்தமரம்) உள்ளடக்கி டிஎஸ்பி ஆபிஸ், போக்குவரத்து காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம், அமைக்க வேண்டும்

சுரண்டையில் போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் அமைக்க வேண்டும் என தொடர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அது சுரண்டையில் அமைக்க பரீசீலனை செய்யப்பட்டும் சுரண்டையில்அமைக்கப்படவில்லை வேறு பகுதிக்கு திருப்பி விடப்பட்டது. ஆகவே பகுதி நேர மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்க வேண்டும்

திருநெல்வேலியில் இருந்து ஆலங்குளம், சுரண்டை வழியாக சங்கரன்கோவிலுக்கு புதியரயில்பாதைஅமைக்க 15 வருடங்களுக்கு முன்பு கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பரிசீலனை செய்யப்பட்டது ஆனால் அதுகுறித்து எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை ஆகவே இதற்கான பணிகளை துவக்க வேண்டும் சுரண்டை பகுதியின் வழக்குகளை விரைந்து விசாரணை நடத்த சுரண்டையில் சப்கோர்ட் அமைக்க வேண்டும் சுரண்டையை சுற்றியுள்ள கிராம பஞ்சாயத்துகள் கீழப்பாவூர், ஆலங்குளம், கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை, பஸ் வசதியே இல்லாத மேலநீலிதநல்லூர் ஆகிய யூனியன் பகுதிகளில் உள்ளன இதனால் இப்பகுதி மக்கள் யூனியன் ஆபிஸ் தொடர்பான பணிகளுக்கு சென்று வர சிரமப்படுகின்றனர் ஆகவே சுரண்டையை சுற்றியுள்ள கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைத்து சுரண்டையில் யூனியன் அலுவலகம் அமைக்க வேண்டும் மேலும் சுரண்டையில் இருந்து நாகர்கோவில், தூத்துக்குடி, இராமேஸ்வரம், தேனி, போடி, குமுளி, மதுரை, கோவில்பட்டி, இருக்க ன்குடி, கேரளா மாநிலம் கொல்லம், திருவனந்தபுரம், கர்நாடக மாநிலம் பெங்களூரு, ஆந்திரா மாநிலம் திருப்பதி ஆகிய பகுதிகளுக்கு பஸ் வசதி இல்லை அதனை இயக்க வலியுறுத்தியும் நடக்கவில்லை ஏற்கனவே தென்காசி மாவட்டம் பிரிக்கப்பட்ட போது மாவட்டத்தின் மைய பகுதியான சுரண்டையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைக்க வேண்டும் எனவும் 30 ஏக்கர் இடத்தை இலவசமாக தர இப்பகுதி மக்கள் உறுதியளித்தும் அது குறித்துபரிசீலிக்கப்பட்டும் அமைக்கப்படாத நிலையில் பிற அலுவலகங்களாவது அமைக்கப்படும் என்ற இப்பகுதி மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை

முதல்வரின் சாலை மேம்பாட்டு திட்டம் மூலம் ராஜபாளையத்தில் இருந்து சங்கரன்கோவில், வீரசிகாமணி, சுரண்டை வழியாகஅத்தியூத்து வரை நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த வேண்டும் சுரண்டையில் உள்ள வர்த்தக நிலையங்கள், மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் மருத்துவ வசதியை மேம்படுத்தும் வகையில் படுக்கை வசதிகளுடன் கூடிய தொழிலாளர் நல மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறுகோரிக்கைகளை தேர்வு செய்யப்படும் வேட்பாளர்கள் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்ப்பில் உள்ளனர்.



# தமிழ்நாட்டின் மக்களுக்காகவும் வளர்ச்சிக்காகவும் தான் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தோம்

## வேட்புமனு தாக்கலுக்கு பின்னர் முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் பேட்டி

திருமங்கலம் சட்டமன்ற தொகுதி அதிமுக சார்பில் போட்டியிட முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார்வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.இதைத் தொடர்ந்து அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஆர் பி உதயகுமார் இன்று தனது ஆதரவாளர்களுடன் கப்பலூர் சுங்கச்சாவடியில் இருந்து தேர்தல் அலுவலகம் வரை ஊர்வலமாக வந்துதேர்தல் நடத்தும் உதவி அலுவலர் சிவஜோதியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் உண்மையாக நாணயமாக உழைக்கும் காரணத்தினால் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி இந்த எளிய தொண்டனுக்கு நான்காவது முறையாக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு கொடுத்துள்ளார்கள். திருமங்கலம் தொகுதி மக்கள் தாய் உள்ளத்தோடு எனக்கு வாக்களிப்பார்கள் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவேன் என்றார்

திமுக தேர்தல் அறிக்கையின் இல்லத்தரசிகள் கூப்பணை பற்றி தான் தமிழ்நாடே பேசுகிறது எனமுகஸ்டாலின்கூறியது குறித்து கேள்விக்கு

ஐந்து ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள்.ஸ்டாலின் மக்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் மக்களுக்கு உண்மையான திட்டம் என்றால் அப்போதே கொடுத்திருக்கலாம் ஆனால் இது ஏமாற்று திட்டம் தேர்தல் நேரத்திலே தேர்தலில் பின்தங்கி இருக்கும் காரணத்தினால்அதைதூக்கி நிறுத்துவதற்காக பல்வேறு யுக்திகளை திமுக கையாண்டு வருகிறது. அதில் இது ஒரு யுக்த்தியாகஉள்ளது. மக்களிடத்தில் இது எடுபடவில்லை

தொடர்ந்து பாஜகவிடம் அதிமுகவை அடகு வைத்தது போல் நாங்கள் செயல்படவில்லை என ஸ்டாலின் பேசியது குறித்த கேள்விக்கு

யார் தேவைக்காக வெண்கொடை பிடிப்பதும் தேவை என்றால் கருப்புபலூன் ஊதுவதும் இரட்டை நிலையை யார் கடை பிடித்தார்கள் என்று ஸ்டாலின் சொல்வதை விட தமிழக மக்கள் தெளிவாக சொல்கிறார்கள் அவர்கள் எப்படி கருணாநிதி காலத்திலும் ஸ்டாலின் காலத்திலும் டெல்லிக்கு ஓடோடி சென்று அங்கே காலில் விழுந்து மண்டியிட்டு மத்திய அமைச்சரவையில் பதவி பெற்றார்கள் ஜெயலலிதா காலத்திலும், எடப்பாடியார் காலத்திலும் தமிழ்நாட்டின் மக்களுக்காகத்தான் கோரிக்கை வைத்திருக்கிறோமே தவிர வளர்ச்சித் திட்டங்களுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ்நாட்டிற்காக,தமிழின் வளர்ச்சிக்காகத்தான் கோரிக்கை வைத்திருக்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் மந்திரி பதவிக்காக கோரிக்கை வைத்து இதுவரை மத்திய அரசுக்கு நெருக்கடியை கொடுக்கவில்லை 14 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்தவர்கள் அவர்கள்தான் என நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

தேர்தல் அறிக்கையில் 38 வருவாய் மாவட்டம் நேரடியாக சென்று மக்களுடைய கோரிக்கையை பெற்று அதை தேர்தல் அறிக்கையாக பதிவு செய்தோம். பத்திரிக்கையாளர்கள் கோரிக்கையும் கேட்டு பத்திரிக்கையாளர்கள் நலன் காக்கும்வகையில் தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளோம் பத்திரிக்கையாளர்களும் எடப்பாடி யாருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

# Artemis II mission: Astronaut says 'felt like we'd hit Earth' during Orion maneuver | All about the NASA mission



*Canadian astronaut Jeremy Hansen described a surreal moment aboard NASA's Orion spacecraft, saying it felt like he was "falling out of the sky" as the crew powered toward the Moon on the Artemis II mission.*

*Hansen, a 50-year-old former fighter pilot on his first spaceflight, said the initial hours in space were filled with awe.*

*Speaking during a video call on Saturday, Hansen shared early experiences from the journey, as the spacecraft crossed the halfway mark between Earth and the Moon – more than 2,41,000 km (150,000 miles) away, reported news agency AFP.*

*Flanked by fellow astronauts Victor Glover and Reid Wiseman, Hansen reflected on how rapidly their home planet seemed to shrink from view. "By the time we had a bit of a nap and got up, the Earth was just so far away," Hansen said during the interaction hosted by the Canadian Space Agency (CSA).*

*'Like falling out of the sky'*

*The most intense moment, Hansen said, came during the translunar injection burn, a critical maneuver that set Orion on its path toward the Moon.*

*"It just felt like we were falling out of the sky back to Earth, and I said to Reid, 'It feels like we're gonna hit it,'" Hansen said.*

*"It's amazing that we're actually gonna go around and miss this thing. It was just so close and so to take all of that in was really phenomenal."*

*The maneuver brought the spacecraft within about 200 kilometres of Earth before slingshotting it toward the Moon, creating the dramatic sensation he described.*

*Hansen, who joined the Canadian Space Agency in 2009 after serving in the Royal Canadian Air Force, is set to become the first non-American to travel around the Moon.*

*The Artemis II mission, launched from Kennedy Space Center in Florida on Wednesday evening, marks NASA's return to crewed lunar missions under the Artemis programme.*

*The four-member crew includes commander Reid Wiseman, pilot Victor Glover, mission specialist Christina Koch, and Hansen.The journey is expected to take about four days to reach the Moon's vicinity, with a planned flyby scheduled for April 6. While the astronauts will not land, the mission is designed as a critical step toward future lunar landings.*

*One of the next milestones comes on day five, when Orion enters the Moon's sphere of influence. According to NASA, this is the point where lunar gravity overtakes Earth's pull.*

*If successful, Artemis II will set a new record for the farthest distance traveled by humans in space, surpassing the crew of the Apollo 13 mission.*


*The spacecraft is expected to pass within roughly 6,618 km (4,112 miles) of the Moon, which astronauts say will appear about the size of a basketball held at arm's length from the capsule window.*

*During the 10-day mission, the crew will carry out tests, conduct experiments, and prepare to capture detailed images of the lunar surface. In a first-of-its-kind move, they are also scheduled to communicate with astronauts aboard the International Space Station.*

*NASA's broader goal under the Artemis programme is to establish a sustained human presence on the Moon, including plans for a base where astronauts can live and work. A future mission is expected to attempt a lunar landing as early as 2028.*

*During a planned lunar flyby on Monday, April 6, the crew will capture high-resolution images and share their observations of the Moon's surface, including parts of the far side that have never been directly seen by humans.After completing the flyby, the astronauts are set to return to Earth, with a splashdown scheduled in the Pacific Ocean off the coast of*

# சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் ரூ.11 கோடி மதிப்பிலான சுவிஸ் தங்க கட்டிகள் பறிமுதல்



பிஜாப்பூர்: சத்தீஸ்கர் மாநில பஸ் தார் சரக ஐஜி. சுந்தர்ராஜ் பட்டிலிங்கம் நேற்று கூறியதாவது: மாவோயிஸ்ட் முக்கியத் தலைவர் ரூபேஷ் சரணடைந்ததைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களின் தளபதி பாப்பாராவ் என்பவருக்காகப் பெருமளவு ரொக்கம், தங்கம் பிஜாப்பூர் வனப்பகுதிக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், கடந்த 10 நாட்களாக நடத்தப்பட்டதீவிரவிசாரணையைத் தொடர்ந்து, அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மாவோயிஸ்ட்களின் மறைவிடம் கண்டறியப்பட்டது.

அங்கிருந்து சுவிஸ்முத்திரையுடன் கூடிய தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 7.2 கிலோ எடை கொண்ட இந்த தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.11.16 கோடி.

தங்கக் கட்டிகளில் சுவிஸ் முத்திரை இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.தடயவியல் சோதனைகளுக்குப் பின்னரே இதன் தரம் மற்றும் உண்மைத் தன்மை குறித்துத் தெரிய வரும். இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கடந்த நிதியாண்டில் சுங்கச்சாவடிகளில் ரூ.82,000 கோடி வசூல்: Fastag மூலம் பரிவர்த்தனை 5.7% அதிகரிப்பு




டெல்லி: கடந்த நிதியாண்டில் மட்டும் நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் ரூ.82,900.16 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய நிதியாண்டை விட 14% அதிகமாகும். Fastag மூலம் பரிவர்த்தனை முந்தைய நிதியாண்டை விட கடந்த நிதியாண்டில் 5.7% அதிகரித்துள்ளதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. புதிய சுங்கச் சாலைகள் சேர்க்கப்பட்டது, துரிதப்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய வருடாந்திர ஃபாஸ்டேக் (FASTag) வசதியின் அறிமுகம் ஆகியவற்றை மூலம் சுங்கச் சாவடி கட்டணம் அதிகரித்துள்ளது. 2025 நிதியாண்டில் ரூ.72,930.83 கோடி மதிப்பிலான சுங்கக்கட்டணம்வசூலிக்கப்பட்டது. ஈரான் போரினால் ஏற்பட்ட இடையூறுகள் இருந்தபோதிலும்,தொடர்ச்சியான பொருளாதாரச் செயல்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில், மார்ச் மாதத்தில் வணிக வாகனங்களுக்கான மொத்த சுங்கக் கட்டண வசூல், பிப்ரவரியில் இருந்த ரூ.6,924.57 கோடியிலிருந்து ரூ.7,193 கோடியாக உயர்ந்தது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஆண்டு சுங்கக் கட்டண வசூல் மும்மடங்குக்கும் மேலாக உயர்ந்துள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.